செ.வெ.எண்: 26 நாள்: 20.07.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் தங்கள் தேசிய அடையாள அட்டை காண்பித்து நகலினை வழங்கி இதுவரை 11,714 நபர்கள் கொரோனா (Covid-19) நிவாரண உதவித்தொகை பெற்றுள்ளனர்.

மேலும், இதுநாள் வரை நிவாரண உதவித்தொகை பெறாத மாற்றுத்திறனாளிகள் தங்களின் தேசிய அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் அல்லது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் ஜீலை 31ஆம் தேதிக்குள் வழங்கி கொரோனா நிவாரண உதவித்தொகை பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**